

# மூலோபாய முகாமைத்துவத் திட்டம் மற்றும் முன்னேற்றம்-2017
# மூலோபாய முகாமைத்துவத திட்டம்-2018



விசேட பணிப் பொறுப்பு அமைச்சு

## தொலைநோக்கு

"மகிழ்ச்சி நிறைந்த மக்களுடனான அபிவிருத்திசார் பொருளாதாரமொன்று"

## பணி

"தேசியத் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னுரிமை உரித்தாக்கப்பட வேண்டிய உன்னத நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களில் தேவையான பங்களிப்பினை வழங்குதல், உப முறைசார் பிரவேசங்களினூடாக அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துவதற்கு பங்காற்றுதல் மற்றும் புதிய அறிவினைப் பெருக்குவதற்கு தோள் கொடுப்பதனூடாக கலாசார மற்றும் ஆன்மீகம்சார் பெறுமதிகள் வரைவொன்றினூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தியினை மேம்படுத்துதல்."

# கடமைப் பொறுப்பு

- 2015.10.24 ஆந் திகதிய 1937/36 என்ற இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக விசேட கடமைப்பொறுப்புக்கள் அமைச்சு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

- 2015.10.28 ஆந் திகதி செத்சிறிபாய இரண்டாவது கட்டத்தின் ஆறாவது மாடியில் அமைச்சு தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

- 2015.12.18 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினூடாக அமைச்சுக்குக் கடமைப் பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- அதன் பிரகாரம் அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் செயற்பாடுகள் பின்வருமாறு.

    1. தேசிய தேவைப்பாடுகளுக்கமைய அமுல்படுத்தவேண்டிய மற்றும் உடன் கவனம் செலுத்த வேண்டிய துறைகள் தொடர்பிலான விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்குப் பங்களிப்புச் செய்தல்

    2. அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்படைக்கப்படும் விசேட கருத்திட்டங்களை தொடர்புடைய ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்புச் செய்தல்.

    3. விசேட கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ஏனைய அமைச்சுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளல்

    4. பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழுவின் பணிகளை ஒருங்கிணைப்புச் செய்தல்

    5. அபிவிருத்தித் துறை பற்றிய ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளுதல்.

# அபிவிருத்தி இலக்குகள்

1. பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதனூடாக பொருளாதார அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துதல்.

2. அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்படைக்கப்படுகின்ற விசேட பணிகளை அமுல்படுத்துவதற்காக ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்புச் செய்வதனுடாக பொதுமக்களுக்கு அளப்பறிய சேவையினை வழங்குதல்.

3. அபிவிருத்தி மற்றும் பிரதான பொதுமக்கள் பிரச்சினைகளை இலக்காகக் கொண்ட விசேட கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ஏனைய அமைச்சுக்களுக்கு உதவுவதனூடாக அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

4. விரைவில் கவனத்திற்கு உட்படுத்தப்படவேண்டிய களத்துறைகளின் விசேட நிகழ்ச்சித் திட்டங்களுக்கு பங்களிப்புச் செய்வதனூடாக தேசியத் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு உதவுதல்/

5. அபிவிருத்தி துறைகளுடன் தொடர்புடைய ஆய்வுகளை மேற்கொள்ளுதல்.

## 01. அபிவிருத்தி இலக்கு

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதனூடாக பொருளாதார அபிவிருத்தியினைத் துரிதப்படுத்தல்.

## நோக்கம்

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவினால் எடுக்கப்பட்டு வரும் தீர்மானங்களை நிச்சயிக்கப்பட்டு வரும் காலவரையறையினுள் அமுற்படுத்துவதற்கு உதவுதல்.

## பிரதான முன்னேற்றச் சுட்டி

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சரவைக் குழுவுக்கு கலந்து கொண்ட தடைவைகளின் எண்ணிக்கை

## இலக்குகள்

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவின் மூலம் கூட்டச் செயற்பாடுகளின் ஒப்படைக்கப்படும் பணிகளின் எண்ணிக்கையினை விளைதிறனாக ஒருங்கிணைப்புச் செய்தல்.

## நிகழ்ச்சித் திட்டங்கள்

கண்டி பாரிய நகர மேம்பாட்டுத் திட்டத்தினை அமுற்படுத்துவதற்கு உதவுதல் உட்பட பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவினூடாக முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள்

## 01. அபிவிருத்தி இலக்குகள் -செயலாற்றுகை

### பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவின் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்வதனூடாக பொருளாதார அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துதல்.

பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு கௌரவ பிரதமரின் தலைமைத்துவத்தில் பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைக் குழு வாரந்தோறும் கூட்டப்படுகின்றது.

2017 ஆம் ஆண்டில் பின்வரும் பிரச்சினைகளில் காலத்துக்கேற்ற அபிவிருத்தித் தேவைப்பாடுகள் கருத்திற்கொள்ளப்பட்டு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவினால் பின்வரும் விடயங்கள் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம அவர்களின் தலமைத்துவத்தின் கீழ் அமைச்சரவை உப குழுவால் தேசிய அபிவிருத்தி செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்காக ஆற்றல்மிக்க பங்ளிப்பொன்று வழங்கப்பட்டுள்ளது.

1. கண்டி மாநகர அபிவிருத்தித் திட்டம்
2. வரட்சிக்காலத்தில் மின்சாரத்தினை வழங்குதல்.
3. ஹம்பாந்தோட்டை துறைமுக கருத்திட்டம் தொடர்பில் சலுகை உடன்படிக்கை
4. திரவ இயற்கை வாயு ஆலை, சுத்திகரிப்பு, சீமெந்துத் தொழிற்சாலையினை அமைத்தல் மற்றும் நிறுவுகை தொடர்பில் கொள்கைகளைத் தயாரித்தல்.
5. வடகிழக்கு மாகாணங்களில் முன்னுணைத்து அமைக்கப்பட்ட வீடமைப்புத் திட்டங்கள்.
6. 2018 வரவு செலவுத்திட்ட தயாரிப்பதற்கான நடமுறை
7. கருத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்’றுவதற்காக ஒப்பந்தாரர்களின் நிதியோட்டம் மேம்படுத்துவது பற்றிய முன்மொழிவுகள்.
8. கிராமிய பாலங்கள் நிகழ்ச்சித்திட்டம்.
9. பால்மா இறக்குமதி.
10. இலங்கையில் இரத்தினக்கல் ஆபரணக் கைத்தொழில் மேம்படுத்தல்கள்.
11. மொத்த கேள்விப்பத்திர தொழிற்பாடு மீண்டும் மீளாய்வு செய்தல் மற்றும் உடைத்து அப்புறப்படுத்த முடியுமான அனைத்து கட்டிடங்கள் அழித்’துவிடக்கூடிய தொழிற்பாடு தீர்த்தல், துரிதப்படுத்துதல் மற்றும் கந்தளாய் சீனிக்கைத்தொழிற்சலையின் பொருட்கள் மற்றும் உபகரணங்கைளை விற்பனை செய்’தல்.
12. இலங்கை உரிமைப் பெற்’றுள்ள வங்கியின் பணிப்பாளர்களின் ஆகக்கூடிய வயது மற்றும் பதவி வகிக்கும் காலம்.

# 1.1 கண்டி மாநகர அபிவிருத்தித் திட்டம்

அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பல நிறுவனங்களினால் கண்டி நகரம் தொடர்பில் பல்வேறான அபிவிருத்தித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டு வருவதுடன், அதன் பிரகாரம் கண்டி மாநகர அபிவிருத்திச் செயற்பாடுகளை அமுல்படுத்தும்போது அச்செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்து முறைாசர் வழிகாட்டலொன்றினை வழங்கும் பொறிமுறையொன்று இருக்கும் தேவைப்பாடு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பிலான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் கவனஞ் செலுத்தப்பட்டது.

இக்கண்டி மாநகர அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின்' நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்குப் பொருத்தமான பொறிமுறையொன்றினை பரிந்துரை செய்தல், வழிகாட்டல்களைத் தயாரித்தல் மற்றும் முன்னேற்றத்தினை ஆராய்ந்து பார்த்து பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பிலான அமைச்சரவைக் குழுவுக்கு அறிக்கையிடுவதற்கு அமைச்சர்கள் எட்டுப் பேரினைக் கொண்ட அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன், அதன் தவிசாளராக விசேட கடமைப்பொறுப்புக்கள் கௌரவ அமைச்சர் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்காக கண்டி கட்டம்பே பிரதேசத்தில் மத்திய மாகாண நூலகச் சேவைச் சபையில் அலுவலகமொன்றினை அமைக்கப்பட்டது. அந்த அலுவலகத்தினை பராமரித்தல் மற்றும் நீர் செலவுகள், தொலைபேசி செலவுகள் மற்றும் கட்டட வாடகை கொடுப்பனவு அடிப்படை நிர்வாக செலவுகள் தொடர்பாக விசேட கடமைப் பொறுப்புக்கள் அமைச்சின் 2017 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு பயன்படுத்திக் கொள்ளப்பட்டது.

**கண்டி மாநகர அபிவிருத்தியின் எதிர்பார்க்கப்பட்ட பலாபலன்கள்**

- அதிகமான வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்
- பொதுமக்களின் சுகாதாரமாக வாழ்க்கை நிலைமைகளை மேம்படுத்துதல்.
- மிகச் சிறந்த சூழலொன்றை உருவாக்குதல்.
- வீடற்றவர்களுக்கு வீடுகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- வறுமையை ஒழித்தல்.
- போக்குவரத்துக்காக கண்டிக்கே தனித்தன்மை வாய்ந்த கட்டடக்கலை அடிப்படையாகக் கொண்ட பௌதீக அபிவிருத்தி திட்டமொன்றை அமுலாக்குதல் மற்றும் மேம்படுத்தப்பட்ட வீதி வலையமைப்பு அபிவிருத்தி செய்தல்.
- வெளிநாட்டு அந்நியச் செலாவணி வருமானம் மேம்படுத்துதல்.
- மொத்தத் தேசிய உற்பத்தியை அதிகரித்தல்.

# 1.2 கண்டி மாநகர அபிவிருத்தி பிரதேசம்

கண்டி மாநகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினால் கண்டி நகரம் உட்பட 10 பிரதேச செயலக பிரிவுகள் உள்ளடங்கப்பட்டுள்ளது.

**பிரதேச செயலக பிரிவுகள்**

- தும்பனை, பூஜாப்பிட்டி, அக்குரணை, பாததும்பறை, குண்டசாலை, கங்கவட்ட கோரளை, ஹாரிஸ்பத்துவ, யடிநுவர, மற்றும் பாதஹேவாகெட்ட போன்றனவாகும். அவற்றின் சனத்தொகை 902,000 (2011) உம், நிலப்பிரதேசம் 608 சதுர கி.மி. பரப்பளவைக் கொண்டுள்ளது.

**உள்ளூராட்சிமன்ற பகுதிகள்**

- கண்டி மாநகர சபை, வத்தேகம நகர சபை, கடுகண்ணாவ நகர சபை, தும்பனை பிரதேச சபை, பூஜாப்பிட்டி பிரதேச சபை, அக்குரணை பிரதேச சபை, பாததும்பறை பிரதேச சபை, குண்டசாலை பிரதேச சபை, கங்கவட்ட கோரளை (கண்டி பட்டிணமும் சூழலும் மற்றும் கங்கவட்ட கோரளை) ) பிரதேச சபை, ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை, யட்டிநுவர பிரதேச சபை, உடுநுவர பிரதேச சபை மற்றும் பாதஹேவாகெட்ட பிரதேச சபை



## 1.3 கண்டி மாநகர திட்டத்தின்கீழ் அமுல்படுத்தப்படுகின்ற செயற்றிட்டங்கள்

1. போகம்பறை சிறைச்சாலை வளாகத்தின் சூழிடங்கள் அபிவிருத்திக் கருத்திட்டம்.
2. கொஹாகொட கழிவுப்பொருள் ஆற்றல்/ உரமாக மாற்றும் கருத்திட்டம்
3. மஹய்யாவ குறைவருமானம் பெறுகின்றவர்களுக்கான வீடளிப்பு கருத்திட்டம்
4. ஏற்றுமதி பயிர் கிராமிய கருத்திட்டம்
5. கண்டி பொது வைத்தியசாலை வளாகத்தில் அனுமதியற்ற குடியமர்ந்துள்ளோருக்கு வீடுகளை அமைத்தல்.
6. பேராதனை தாவரவியற் பூங்கா எதிரேயுள்ள வாகனத் தரிப்பிடத்தை அபிவிருத்தி செய்தல்.
7. சட்டத்தரணிகளின் அலுவலகம் மீள இட அமைவு
8. கட்டுகஸ்தோட்டை பழைய பாலம் அபிவிருத்தி.
9. சிங்க ரெஜிமன்ட் வளாகத்தில் வாகனத் தரிப்பிட அபிவிருத்தி.
10. சந்தைத் தொகுதி அபிவிருத்தி.
11. வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் அமுல்படுத்தப்படுகின்ற வீதி அபிவிருத்தித் திட்டங்கள்.
12. குட்செட் பேருந்து நிலைய அபிவிருத்தி
13. தலதா மாளிகையில் பந்தி ( யானைகள் கட்டுமிடம்) அபிவிருத்தி செய்தல்
14. பழைய தபாலக கட்டிட அபிவிருத்தி.
15. கண்டி புறநகர புகையிரத வீதி அபிவிருத்திக் கருத்திட்டம்.
16. மத்திய சந்தைத் தொகுதிக்கு அருகில் பாதசாரிகள் கடவை அமைத்தல்.
17. உபாயத்திட்ட நகர அபிவிருத்தி கருத்திட்டத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற பல்துறை போக்குவரத்து நிலையம்.
18. கழிவுநீர் மற்றும் மழைநீர் முகாமைத்துவ கருத்திட்டம்.
19. ஜப்பான் உதவியுடன் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிநுட்ப பல்கலைக்கழகம்.
20. தொழிநுட்ப நகரமொன்றினை நிறுவுதல்.




1 கொஹாகொடை கழிவுப்பொருள் முகாமைத்துவ கருத்திட்டம்

2 போகம்பறை சிறைச்சாலை வளாகத்தின் சூழிடங்கள் அபிவிருத்தி செய்தல்

3 பேராதனை தாவரவியற் பூங்கா எதிரே வாகனத் தரிப்பிடம் அபிவிருத்திசெய்தல்

4 வழக்கறிஞர் பழைய அலுவலக கட்டிடம் மீள் இடஅமைவு

5 கடுகஸ்தோட்டை பழைய பாலம் அபிவிருத்தி.

6 சந்தைப்பகுதி அபிவிருத்தி.

7 கடுகண்ணாவை முதல் கட்டுகஸ்தோட்டை வரையும் இரட்டைவழி புகையிரத வீதி அபிவிருத்தி

8 கட்டுகஸ்தோட்டை முதல் மாத்தளை வரையும் தற்போதைய புகையிரத வீதி புனரமைப்பு

9 தற்போதைய தபால் அலுவலகம் அபிவிருத்திசெய்தல்

10 கண்டி போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி மற்றும் வளாகத்தில் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை மீண்டும் குடியமதர்த்துதல்.

11 மஹய்யாவ குறை வருமானம் பெறுகின்றவர்களுக்கான வீட்டுத்திட்டம்.

12 மகாவலி ஆற்றங்கரை இயற்கை நிலக்காட்சி

# 1.3.1போகம்ரை சிறைச்சாலை வளாகம் அபிவிருத்தி செய்தல்

கண்டி நகர மத்தியில் மூலோபாய ரீதியில் முக்கிய இடத்தில் அமைந்துள்ள உயர் தொல்பொருள் சார்ந்த பெறுமதி கொண்ட போகம்பரை சிறைச்சாலை வளாகத்தின் சூழிடங்கள் அபிவிருத்திக் செய்தல் மற்றும் அக்குறித்த வளாகம் வினைத்திறனுடன் பாவிக்கும் நோக்கில் இந்தக் கருத்திட்டம் 3 கட்டங்களில் அமுல்படுத்தப்படவுள்ளது.

அமைச்ரைவையினால் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடக்கலை நிறுவமொன்றினால் இந்த முன்மொழியப்பட்ட அபிவிருத்தி குறித்து திட்டம் முன்வைக்கப்பட்டிருந்ததுடன் முதலீட்டுச் சபையால் குறித்த வாளகம் முதலீட்டு வலயமாகப் பெயரிடப்பட்டுள்ளது. இதுவரை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் ஆரம்பகட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், கண்டி நகர அபிவிருத்தி பற்றிய அமைச்சுக் குழுவின் மதியுரைகளின் பிரகாரம் அந்த வளாகத்துக்குள் அமைந்திருந்த சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குரிய உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களில் வசித்துவந்த அலுவலர்களுக்குத் தற்காலிகமாக வாடகை வீடுளைப் பெற்றுக்கொடுப்பதற்காக 2017 ஆம் ஆண்டில் விசேட கடமைப்பொறுப்புக்கள் அமைச்சினால் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளன. சிறைச்சாலை அதிகாரசபைக்குரிய உத்தியோகபூர்வ வாசஸ்தலம் பொது நுழைமாடம் மற்றும் வந்திருப்பவர்கள் நடமாடும் நிலையத்தை அபிவிருத்தி செய்து பயன்படுத்தும்பொருட்டு விலைக்குறிப்பீடுகள் அழைக்கப்பட்டுள்ளன.



## 1.3.2 கொஹாகொட கழிவுப்பொருள் முகாமைத்துவக் கருத்திட்டம்

கண்டிப் பிரதேச மக்கள் முகங்கொடுக்கின்ற பிரதான பிரச்சனையான குப்பை கூலங்களுக்குத் தீர்வாக கொஹாகொட கழிவுப்பொருள் முகாமைத்துவக் கருத்திட்டம் இனங்காணப்பட்டுள்ளதுடன் இந்தக் கருத்திட்டமானது அரச தனியார் பங்காண்மையின் கீழ் அமுல்படுத்த எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தக் கருத்திட்டத்தினூடாக பின்வரும் நன்மைளை அடைவதற்காக குறியிலக்கப்பட்டுள்ளது

I. கண்டிப் பிதேசத்தின் திட கழிவுப்பொருட்ளை முறைப்படி முகாமை செய்தல்.
II. கலப்பு உரம் உற்பத்திசெய்வதன் மூலம் சேதன பயிர்த்தொழில் மேம்படுத்துதல்.
III. சூழலுக்கேற்ற மாற்று மின் உற்பத்தி
IV. உணவு வகைகளின் பாதுகாப்பு மேம்படுத்துதல் மற்றும் அறுடைக்குப் பின்னர் ஏற்படும் இழப்பீடுகளை கட்டுப்படுத்தும் குளிரூட்டல் தொகுதி நிறுவுதல்

காலத்தின் தேவைப்பாடுகள் நிலவுகின்ற இந்தக் கருத்திட்டத்தின் நடவடிக்கைகளை விரைவாக ஆரம்பிப்பதற்குத் தேவையான ஆலோசனைகள், ஒத்துழைப்புகளை கண்டி மாநகர அபிவிருத்தி பற்றிய அமைச்சரவைக் குழுவினால் வழங்கப்படுவதுடன் இரண்டு கிழமைகளுக்கு ஒருமுறை அமைச்சு சார்ந்த குழுவின்போது கருத்திட்டத்தின் முன்னேற்றங்கள் பற்றி மீளாய்வு செய்யப்படும். இந்த கருத்திட்டத்தின் வெற்றிக்காக 2017 ஆம் ஆண்டில் விசேட கடமைப்பொறுப்புகள் அமைச்சினால் இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச்செய்து அமைச்சரவைக் குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்த கருத்திட்டத்துக்காக சுற்றாடல் செயல்வி ளைவு கணிப்பீடு அறிக்கைக்குப் (EIA) அடிப்படை சுற்றாடல் பதிலாக தொடக்க சுற்றாடல் ஆராய்வு சான்றிதழ் (IEE) பெற்றுக் கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.



## 1.3.3 மஹய்யாவ குறைவருமானம் பெறுகின்றவர்களுக்கான வீடமைப்புத் திட்டம்.

கண்டி மாநகர அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் ஒருங்கிணைந்த கருத்திட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ள கண்டி மஹய்யாவ நகர வீடமைப்பு கருத்திட்டம், கண்டி மஹய்யாவ குறைவான வசதிகளைக்கொண்ட நகர வாழ் 1220 குடும்பங்களின் வீட்டுப் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக மற்றும் அந்த சனத்தொகையின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த கருத்திட்டத்தினூடாக கண்டி நகரத்தில் சமூக நிலைப்பாட்டினை ஏற்படுத்துவது முக்கிய நோக்கமாக இருப்பதுடன் 03 கட்டங்களின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

**I ஆவது** கட்டம்:- கண்டி மாநகர சபையினால் வழங்குவதற்கு உடன்பட்டுள்ள 02 ஏக்கர் காணிகளையும் பயன்படுத்தி 300 மாடிவீடுகளைக் நிர்மாணித்தல், அந்த வீடுகளில் 300 குறைவருமானம் பெறுகின்ற குடும்பங்களினை மீண்டும் குடியமர்த்தப்பட்டு கண்டறியப்பட்டிருப்பதுடன் 12 ஏக்கர் காணியிலிருந்து 06 ஏக்கர் காணியளவு விடுவித்துக் கொள்ளல்.

**II** ஆவது கட்டம்:- விடுவிக்கப்பட்ட 06 ஏக்கர் காணியளவில் மாடிக்கட்டிடங்கள் 920 அலகுகள் நிர்மாணித்து எஞ்சிய 920 குறைவருமானம் பெறுகின்ற குடும்பங்களைக் குடியமர்த்துதல்

**III** ஆவது கட்டம்:- கருத்திட்டத்தின் மீள்குடியிருப்பு செயற்பாட்டின் மூலமாக விடுவிக்கப்படுகின்ற 12 ஏக்கர் காணியிலிருந்து 06 ஏக்கர் நிலப்பரப்பு பயன்படுத்தப்பட்டு அரச, தனியார் பங்காண்மையின் மூலம் கலப்பு அபிவிருத்தி மேற்கொள்ளல்.

மேற்படி கருத்திட்டத்தின் எதிர்வரும் நடவடிக்கைகள் தொடர்பாக கண்டி மாநகர அபிவிருத்தி பற்றிய அமைச்சு சார் குழுவின் தவிசாளர் கௌரவ விசேட கடமைப்பொறுப்புக்கள் அமைச்சர் மற்றும் கௌரவ வீடமைப்பு மற்றும் நிருமாணத்துறை அமைச்சர் மற்றும் கௌரவ மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரினால் ஒருங்கிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று 2017.09.18 ஆந் திகதி சமர்பிக்கப்பட்டு தேவையான அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக் கொண்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன்.



# 1.3.4 ஏற்றுமதிப் பயிர் கிராமிய கருத்திட்டம்

கண்டிப் பிரதேசத்தில் உள்ள காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு அல்லது அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் முதலியவற்றில் பொறுப்பிலுள்ள பயிரிடப்படாத காணிகளை விளைவு பெருக்கத்துடன் பயன்படுத்தி மீண்டும் பயிரிடுவதற்காகவும் பிரதேசத்திலுள்ள குறைவருமானம் பெறுகின்ற குடும்பங்களின் அடிப்படை விவசாய ஆற்றல்களைப் பயன்படுத்தி இக்காணிகளை குறுங்கால, நடுத்தர மற்றும் நீண்டகால வேலைத்திட்டத்தின் கீழ் வெளிநாட்டு அந்நியச் செலாவணி உழைப்பு அல்லது சேமிக்கக்கூடிய காணிகளாக மாற்றுவதும் இந்தக் கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாக அமைந்துள்ளது.

கௌரவ விசேட கடமைப்பொறுப்புகள் அமைச்சரின் தலைமையில் கண்டி மாநகர அபிவிருத்தி தொடர்பான அமைச்சுசார் குழு ஆலோசனைகளின்படி கண்டி மாவட்ட செயலகத்தினால் மெததும்பர பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள ஹூட்சைட் தோட்டத்தில் 400 ஏக்கர்கள் காணியை இதற்குப் பொருத்தமானதாக கண்டறியபட்டுள்ளது. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் ஊடாக அளவீட்டு நடவடிக்கைகள் முடிவு செய்யப்பட்டு தேர்தெடுக்கப்பட்ட பயன்பெறுவோருக்கு 02 ஏக்கர்கள் வீதம் காணித்துண்டுகள் குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக பஸ்பாகே கோரளையின் மற்றும் கங்க இஹல கோரளை பிரதேச செயலக பிரிவில் அமைந்துள்ள குறைப் பயன்பாட்டு காணிகள் 2000 ஏக்கர்கள் ஆனளவும் எதிர்காலத்தில் இந்தக் கருத்திட்டத்திற்காக சேர்த்துக்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. பாரியளவில் அந்நிய செலாவணி செலவிடப்படுகின்ற பால்மா இறக்குமதிக்குப் பதிலாக உள்நாட்டு பால்மா உற்பத்திகள் மேம்படுத்தும் பொருட்டு இந்த 2000 ஏக்கர் காணி பயன்படுததுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

முதலாவதாக மக்காச் சோளம் போன்ற பயிராலும் இரண்டாவதாக சிபார்சு செய்யப்படுகின்ற மிளகு, கொக்கோ,கோப்பி, கருவா போன்ற பயிர்களும் பயிரிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் இவ்வாறு ஒதுக்கப்படுகின்ற 02 ஏக்கர் காணியில் மிகச் சிறிய வரையறுக்கப்பட்ட பகுதியில் மேற்குறிப்பிட்ட பயிர்களுக்குப் பதிலாக மேலதிக உயர் வருமானம் பெறக்கூடிய மரக்கறி, பழங்கள் மற்றும் மலர்கள் போன்ற பயிர்களும் உயர் தரம்வாய்ந்த பாற்பண்ணை மாடுகளை பயன்படுத்தி அந்நியச் செலாவணியை சேமிக்கும் நோக்கில் பாலுற்பத்தி கருத்திட்டமொன்றை ஆரம்பிக்கவும் இந்த கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்படி கௌரவ விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரினால் இந்த கருதிட்டம் எதிர்காலத்தில் செயல்படுத்துவதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்பித்து அமைச்சரவை அங்கீகாரம் பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.






## 1.3.5 கண்டி போதனா வைத்தியசாலை வளாகத்தில் அனுமதியற்ற முறையில் குடியமர்ந்துள்ளோரை மீளக் குடியமர்த்துதல்

கண்டி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குள் கண்டி பொது வைத்தியசாலையினது அடுத்து மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகளும் உள்ளடக்கப்படும். எவ்வாறாயினும் இந்த அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்தும்போது முறைகேடான குடியிருப்பாளர்கள் தடையாக அமைந்துள்ளனர். 1987 இல் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டு நடவடிக்கைகளுக்கேற்ப வைத்தியசாலைக்குச் சொந்தமான காணி அளவு 58.4 ஏக்கர் ஆக இருப்பினும்,. அதன்படி 23.7 ஏக்கர்கள் காணியளவு முறைகேடான குடியிருப்பாளர்கள் கையில் சிக்கியிருப்பதால் வைத்தியசாலையின் பாவனைக்கு எடுத்துக்கொள்ள இயலுமான காணி அளவு 34.7 ஏக்கர்களாகக் குறைவடைந்துள்ளது. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் பிரதான நோக்கங்களை எய்தும் பொருட்டு முதலாவது கட்டங்களின் கீழ் வைத்தியசாலைக்கு மிக அண்மையில் அமைந்துள்ள 3.8 ஏக்கர் காணியை அனுமதியற்ற முறையில் குடியமர்ந்துள்ளோர்களிடமிருந்து விடுவிக்கவேண்டியுள்ளன.

அதன்படி அனுமதியற்ற முறையில் குடியமர்ந்துள்ளோர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ள காணியை வைத்தியசாலை அபிவிருத்திக்காக விடுவித்தல்,அவர்களுக்கு வைத்தியசாலைக் காணியின் பிறிதொரு பகுதியில் 66 வீடுகளைக்கொண்ட வீட்டுத்தொகுதியை நிர்மாணித்தல் மற்றும் தேவையான நிதி பெறுவதற்காக கௌரவ விசேட கடமைப்பொறுப்புக்கள் அமைச்சர் மற்றும் மேலும் 04 அமைச்சர்களினால் ஒருங்கிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனமொன்று 2017.08.30 ஆம் திகதி முன்வைக்கப்பட்டது.

அதற்கேற்ப 2018 ஆம் ஆண்டில் வீடமைப்பு மற்றும் நிருமாணத்துறை அமைச்சுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி இந்தக் கருத்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும் இதற்கான நிதி வீடமைப்பு மற்றும் நிருமாணத்துறை அமைச்சிடம் இல்லாததன் காரணமாக தேவையான நிதிபெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவைக்கான குறிப்பு முன்வைக்கப்பட்டுள்ளது.

# 1.3.6 பேராதனை தாவரவியற் பூங்கா எதிரில் வாகனத் தரிப்பிடம் அபிவிருத்தி

பேராதனை தாவரவியற் பூங்காவிற்கு வருகை தருகின்ற பொதுமக்களுக்கும் மற்றும் கண்டி போதனா வைத்தியசலைக்கு வருகின்றவர்களுக்கும் போதுமான அளவு மற்றும் பாதுகாப்பான வாகனத் தரிப்பிட வசதிளை வழங்கும் நோக்கில் பேராதனை தாவரவியற் பூங்கா எதிரில் தற்போதுள்ள விவசாயத் திணைக்களம் மற்றும் பேராதனைப் பல்லைக்கழகத்திற்குரிய காணியைப் பயன்படுத்தி நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தரிப்பிடமொன்றினை அபிவிருத்தி செய்தல் இந்தத் கருத்திட்டத்தின் கீழ் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இப்போதாகும்போது பாதையின் இருமருங்கிலும் வாகனங்களை நிறுத்தி வைப்பதால் ஏற்பட்டுள்ள வாகன நெரிசல்கள் கட்டுப்படுத்திக் கொள்வதற்கும் இக்கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.









## 1.3.7 வழக்கறிஞர் களின் பழைய அலுவலகம் அபிவிருத்தி செய்தல்

வழக்கறிஞர்களின் பழைய அலுவலகக் கட்டிடத்தில் இருக்கின்ற வழக்கறிஞர்களுக்கு புதிய நீதிமன்றக் கட்டிடத்தொகுதியில் இடவசதிகள் வழங்கப்பட்டு அந்தக் கட்டிடத்தைப் பாதுகாத்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக தகவல் வழங்கும் நிலையமொன்றை நிறுவுதல் இக்கருத்திட்டத்தினூடாக மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கண்டி நகர அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் குழுவின் மதியுரைகளின் பிரகாரம் குறித்த கட்டிடம் மாவட்ட செயலகத்தினால் கைப்பற்றப்பட்டு அடுத்து மேற்கொள்ளப்படவேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்குப் ஒப்படைக்கப்பட்டுள்ளது.



## 1.3.8 கட்டுகஸ்தோட்டை பழைய பாலம் அபிவிருத்திசெய்தல்

அரச மற்றும் தனியார் பங்காண்மையின் அடிப்படையில் புதிய பாலம் அமைக்கும் எண்ணக்கருவின்படி கட்டுகஸ்தோட்டை பாலம் புதுப்படுத்துதல், அந்தப் பிரதேசத்தில் வாகனத் தரிப்பிடம் மற்றும் பாதாசாரிகள் கடவை அமைத்தல் இந்த கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளது.

எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக இந்தப் பாலம் வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறுப்பேற்குமாறும் உத்தேசிக்கப்பட்ட திட்டத்தை கண்டி மாநகர அபிவிருத்தி பற்றிய அமைச்சுசார் குழுவிற்கு முன்வைக்குமாறும், அக்குழுவால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



## 1.3.9 சிங்க படைவகுப்பு அருகில் வாகனத் தரிப்பிடம் அபிவிருத்தி

சிங்க படைவகுப்பு வளாகத்திற்குச் சொந்தமான 60 பேர்ச் காணியில் மற்றும் அடுத்துள்ள கண்டி மாவட்ட செயலகத்திற்குரிய காணியைப் பயன்படுத்தி வாகனத் தரிப்பிடம் நிர்மாணித்தல இக்கருத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

அரச, தனியார் பங்காண்மையின் கீழ் அமுலாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்ட இந்தக் கருத்திட்டம் மூலம் கண்டி நகரின் தென் முனைவில் பாதுகாப்பான வாகனம் நிறுத்துமிட வசதிகள் பெற்றுக்கொடுக்கவும், வீதி நெரிசல்களைக் குறைக்கவும், காணியினை விளைபெருக்கத்துடன் பயன்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.



## 1.3.10 மத்திய சந்தை அபிவிருத்திப் பணிகள்

தேசிய மற்றும் சர்வதேச வாடிக்கையாளர்களின் தேவைப்பாடுகளுக்கு மற்றும் கண்டி மாநகர அபிவிருத்தி திட்டத்த்திற்கு பொருந்துமாறு 600 விற்பனை நிலையங்கள் கொண்ட நவீன சந்தைத் தொகுதியொன்று நகர அபிவிருத்தி அதிகார சபையினால் நிர்மாணித்தல் மற்றும் அதனுடன் இணைவாக பாதசாரிகள் கடவை அபிவிருத்தி செய்தல் இக்கருத்திட்டத்தின் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நவீன சந்தைத்தொகுதி அமைப்பதற்காக அங்கே தற்போதிருக்கின்ற சந்தை உரிமையாளர்களுக்கு தற்காலிகமான விற்பனை நிலையங்களை வழங்கி, இருக்கின்ற நிலையங்களை அகற்றப்பட வேண்டும். அதனுடன் தொடர்புடைய குறித்த விற்பனை நிலைய உரிமையாளர்களுடன் கண்டி மாநகர அபிவிருத்தி அமைச்சுசார் குழுவின் தவிசாளர் கௌரவ விசேட கடமைப்பொறுப்புக்கள் அமைச்சரின் தலைமையில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றதுடன், இந்த கருத்திட்டத்தை அமுல்படுத்துதல் மேற்பார்வை செய்வதற்காக விசேட கடமைப்பொறுப்புகள் அமைச்சினால் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளினூடாக அமைச்சுசார் குழுவிற்கு தேவையான உதவி வழங்கப்படும்.

# 1.3.11 வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் கண்டி மாநகரில் அமுல்படுத்தப்படுகின்ற கருத்திட்டங்கள்

- மத்திய சந்தைக்கு அருகில் பாதசாரிகள் கடவை அமைத்தல்
- மஹாமாயா கல்லூரியின் முன்பாக புதிய பாலம் அமைத்தல் மற்றும் அணுகுசாலை
- புஸ்பதான சந்தியில் அபிவிருத்திப் பணிகள்.
- தர்மஷோக மாவத்தையில் அபிவிருத்திப் பணிகள்.
- கட்டுகஸ்தோட்டை மெதவல திகன பாதை அபிவிருத்தி.
- மஹய்யாவ இலருந்து கட்டுகஸ்தோட்டை வரையு யாழ்ப்பாண வீதியில் 04 வழிப்பதை அபிவிருத்தி
- பேராதனை - ஹல்லொழுவை வீதியில் தாங்கு சுவர் அபிவிருத்தி நடவடிக்கைகள்.
- திகன - மாபேரியதென்ன வீதி அபிவிருத்திப் பணிகள்

















## 02.அபிவிருத்தி இலக்கு

அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் சந்தர்ப்பத்திற்கேற்ப ஒப்படைக்கப்பட்டு வரும் விசேட பணிகளை ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்புச் செய்வதனுடாக பொதுமக்களுக்கு ஆகக்கூடிய சேவையினை வழங்குதல்.

## நோக்கங்கள்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் அடிக்கடி ஒப்படைக்கப்பட்டு வரும் விசேட கடமைப் பொறுப்புக்களை தீர்மானிக்கப்படும்காலவரையறையினுள் அமுறப்படுத்துதல்.

## பிரதான முன்னேற்றச் சுட்டி

அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் முன்வைக்கப்பட்ட விசேட பணிகளின் எண்ணிக்கை

## இலக்குகள்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் அமைச்சுக்கு முன்வைக்கப்பட்ட விசேட பணிகள் அனைத்தையும் நிச்சயிக்கப்பட்ட காலவரையறையினுள் வெற்றிகரமாக நிறைவு செய்தல்.

# 02. அபிவிருத்தி இலக்கு -செயலாற்றுகை

## அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் அவ்வப்போது ஒப்படைக்கப்படுகின்ற விசேட பணிகளை ஏனைய அமைச்சுக்களுடன் ஒருங்கிணைப்புச் செய்வதனுடாக பொதுமக்களுக்கு அளப்பறிய சேவையினை வழங்குதல்.

அதிமேதகு ஜனாதிபதி அவர்களிடம் பல்வேறு நிவாரணங்களைக் கோரி பல்வேறு தரப்பினர்களால் அடிக்கடி முன்வைக்கப்படுகின்ற காரணங்கள் தொடர்பில் முன்னுரிமை வழங்கி உடனடியாக நிறைவேற்ற வேண்டிய பணிகள் ஜனாதிபதி செயலகத்தினால் இவ்வமைச்சுக்கு முன்வைக்கப்படுவதுடன், அவ்வாறான விடயங்களை ஆராய்ந்து மூலோபாயத் தலையீடொன்றினூடாக உரிய பிரச்சினைகளுக்குரிய தரப்பினர்களது குறைகளை நீக்குதல்' இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இடம்பெறுகின்றது. இதன் கீழ் 2017 ஆம் ஆண்டில் நிவாரணங்களை எதிர்பார்த்து நிற்கும் பல்வேறுபட்ட நபர்கள் மற்றும் குழுக்களின் மூலம் அதிமேதகு ஜனாதிபதி அவர்களுக்கு கிடைக்கப் பெற்ற கடிதங்கள் இவ்வமைச்சுக்கு முன்வைக்கப்பட்டதன் விளைவாக அச்சகல தரப்பினர்களதும் குறைகளை நீக்குவதற்கு பல்வேறான செயற்பாடுகள் எடுக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி செயலகத்தின் அறிவிப்பின் கீழ் விசேட கடமைப்பொறுப்புக்கள் கௌரவ அமைச்சர் அவர்கள் உள்ளூர்க் கருத்தரங்குகள், கூட்டங்கள், வேலைத்திட்டங்கள் போன்றவை தொடர்பில் அதிமேதகு ஜனாதிபதி அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டார். 2017 ஆம் ஆண்டில் அவ்வாறான தேசிய மட்டத்தின் 22 தடைவைகள் கௌரவ அமைச்சர் அவர்களினால் இற்றை வரையில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்




சார்க் விற்பனைக் கண்காட்சியில் பங்குபற்றுதல்




வர்த்தக சம்மேளனத்தின் விருது வழங்கும் வைபவத்தில் பங்குபற்றும்போது

ஜனாதிபதி செயலகத்தின் அறிவிப்பின் கீழ் விசேட கடமைப்பொறுப்புக்கள் கௌரவ அமைச்சர் அவர்கள் சர்வதேச கருத்தரங்குகள், கூட்டங்கள் மற்றும் மன்றங்களுக்கு இலங்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொள்வதுடன், நல்லிணக்க உடன்படிக்கையினூடாக பொருளாதார அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துதல் இதனூடாக இடம்பெறுகின்றது.

இந் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதான செயலாற்றுகை சுட்டியாக இனங்காணப்பட்டிருப்பது, அதிமேதகு ஜனாதிபதி அவர்களினால் அவ்வப்போது அமைச்சுக்கு ஒப்படைக்கப்படும் விசேட பணிகளின் எண்ணிக்கை என்பதுடன், அவ்வெண்ணிக்கை முன்பு நிச்சயித்துக் கொள்ள முடியாததுடன் சந்தர்ப்பத்திற்கேற்ப தீர்மானிக்கப்படும். .அவ்வாறு அமைச்சுக்கு முன்வைக்கப்படும் சகல விசேட பணிகளும் அப்பணியின் தன்மைக் கேற்ப தீர்மானிக்கப்படும் குறிப்பிட்ட கால வரையறையினுள் நிறைவு செய்தலினை இலக்காகக் கொண்டு அமைச்சினால் திட்டம் தயாரிக்கப்பட்டு 2017 இல் அமுல்படுத்தப்பட்டது.



இந்திய பிரதம நிறைவேற்று அலுவலர்களின் மாநாட்டில் பங்குபற்றுதல்




விவசாய விருது வழங்கல் வைபவம்





கௌரவ பிரதமருடன் சீனா பயணம்

## 03. அபிவிருத்தி இலக்கு

அபிவிருத்தி மற்றும் பிரதான பொதுமக்கள் பிரச்சினைகளை இலக்காகக் கொண்ட விசேட கருத்திட்டங்களை அமுறப்படுத்துவதற்கு ஏனைய அமைச்சுக்களுக்கு உதவுவதனூடாக அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

## நோக்கம்

அபிவிருத்தி மற்றும் நலன்புரியினை அடிப்படையாகக் கொண்ட விசேட கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் பலாபலனினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு அக்கருத்திட்டங்களை முன்மொழியப்பட்டவாறு அமுறப்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்தல்.

## பிரதான முன்னேற்றச் சுட்டி

ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட விசேட கருத்திட்டங்களின் எண்ணிக்கை

## இலக்குகள்

அமைச்சரவையினால் ஒப்படைக்கப்படும் கருத்திட்டங்களை குறிப்பிட்ட கால வரையறையினுள் நிறைவு செய்தல்.






# 03. அபிவிருத்தி இலக்கு - முன்னேற்றம்

## அபிவிருத்தி மற்றும் பிரதான பொதுமக்கள் பிரச்சினைகளை இலக்காகக் கொண்ட விசேட கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ஏனைய அமைச்சுக்களுக்கு உதவுவதனூடாக அபிவிருத்தியினைத் துரிதப்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல்.

அமைச்சரவையினால் அடையாளங் காணப்பட்ட அபிவிருத்தி மற்றும் பிரதான பொதுமக்கள் பிரச்சினைகளை இலக்காகக் கொண்டு விசேட கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்குப் பின்வரும் களப்பணி தொடர்பில் 2017 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டுள்ள அமைச்சரவை உப குழுவின் தலைமைத்துவம் கௌரவ விசேட கடமைப்பபொறுப்புகள் அமைச்சரினால் வகிக்கப்பட்டு தேசிய பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தியின் போக்கினை மேம்படுத்துவற்கு மகத்தான பணியொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

1. அரிசி இறக்குமதி
2. ஊழல் விசாரணைக்காக நடுவர் மன்றத்தை அமைத்தல்.
3. நெல் விற்பனை சபையிடமுள்ள கையிருப்புகளை விற்பனை செய்தல்.
4. அம்பாந்தோட்டை துறைமுகத்துடன் தொடர்பான சலுகைப்படியான ஒப்பந்தம்
5. வரையறுக்கப்பட்ட கஹட்டகஹ க்ரபைட் லங்கா கம்பனியின் மறுகட்டடைப்பு மற்றும் மீண்டெழும் செலவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்காக இடைக்கால திட்டம்
6. உயர்கல்வி தரம்வாய்ந்த பாதுகாப்பு நிறுவனத்திற்காக சர்வதேச வலையமைப்பபின் அடுத்தகட்ட மாநாடு 2019 ஆம் ஆண்டடில் இந்த நாட்டில் நடாத்தப்படும்.
